இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை - 600006

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
No. 6, College Road, Chennai–600006
Phone: 044- 28271951.

| நாள் :09-05-2022 | நேரம்:1300 மணி |
|---|---|

# வானிலை தகவல்

நேற்று தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய "அசானி" புயல் நேற்று (08-05-2022) மாலை தீவிர புயலாக வலுப்பெற்று தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலவியது. இது மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று (09.05.2022) காலை 08:30 மணி அளவில் மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவுகிறது. இது மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை (10.05.2022) வடஆந்திரா -ஒரிசா கடற்கரை ஒட்டிய மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வட மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவக் கூடும். அதன்பிறகு வடக்கு-வடகிழக்கு திசையில் ஒரிசா கடற்கரை ஒட்டிய வட மேற்கு வங்க கடல் பகுதியை நோக்கி நகரக் கூடும். இது அடுத்த 48 மணி நேரத்தில் படிப்படியாக புயலாக வலுவிழக்கக்கூடும்.

09.05.2022: தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

10.05.2022: தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

11.05.2022 முதல் 13.05.2022 வரை: வட தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

## அதிகபட்ச வெப்பநிலை:

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஒரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பிலிருந்து 2 - 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

## சென்னையை பொறுத்தவரை:

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

## கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (சென்டிமீட்டரில்):

கொடநாடு (நீலகிரி) 7, உதகமண்டலம் (நீலகிரி) 6, பெருந்துறை (ஈரோடு), பொள்ளாச்சி (கோவை) தலா 5, ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி), பரூர் (கிருஷ்ணகிரி), திருப்பூர், தாளவாடி (ஈரோடு), அமராவதி அணை (திருப்பூர்) தலா 3, எடப்பாடி (சேலம்), கோத்தகிரி (நீலகிரி), நெடுங்கல் (கிருஷ்ணகிரி), காமாட்சிபுரம் (திண்டுக்கல்), குமாரபாளையம் (நாமக்கல்), காங்கேயம் (திருப்பூர்), அரூர் (தர்மபுரி), தாராபுரம் (திருப்பூர்) தலா 2, ஓசூர் (கிருஷ்ணகிரி), போளூர் (திருவண்ணாமலை), உடுமல்பெட் (திருப்பூர்), ஹொகேனக்கல் (தர்மபுரி), ஊத்துக்குளி (திருப்பூர்), கோபிசெட்டிபாளையம் (ஈரோடு), அவிநாசி (திருப்பூர்), சங்கரிதுர்க் (சேலம்),

நடுவட்டம் (நீலகிரி), பவானி (ஈரோடு), பவானிசாகர் (ஈரோடு), தேவலா (நீலகிரி) தலா 1.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை** :

**09.05.2022:** மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 100 முதல் 110 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 120 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

**10.05.2022:** மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 85 முதல் 95 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 105 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். வடக்கு ஆந்திர கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

**11.05.2022:** மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வட மேற்கு வங்க கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். வடக்கு ஆந்திர கடல் பகுதி மற்றும் அதனை ஒட்டிய ஒரிசா கடற்கரை பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

**12.05.2022:** வட மேற்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். ஒரிசா கடற்கரை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாளில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஆழ் கடலில் உள்ள மீனவர்கள் உடனடியாக கரை திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்

மேலும் விவரங்களுக்கு: imdchennai.gov.in இணையதளத்தை காணவும்.


பா. செந்தாமரை கண்ணன்
இயக்குனர்
தென் மண்டல தலைவருக்காக
மண்டல வானிலை ஆய்வு மையம், சென்னை


## 01.03.2022 முதல் 09.05.2022 வரை பெய்த மழை அளவு

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 74 | 56.8 | 30 |
| செங்கல்பட்டு | 5.6 | 34.8 | -84 |
| சென்னை | 0.2 | 33.6 | -99 |
| கோயம்புத்தூர் | 137.6 | 105.7 | 30 |
| கடலூர் | 81.1 | 54.3 | 49 |
| தர்மபுரி | 95 | 89.7 | 6 |
| திண்டுக்கல் | 133.8 | 116.2 | 15 |
| ஈரோடு | 151 | 83.5 | 81 |
| கள்ளக்குறிச்சி | 49.5 | 47.6 | 4 |
| காஞ்சிபுரம் | 20.1 | 42.3 | -53 |
| கன்னியாகுமரி | 216.2 | 184.3 | 17 |
| காரைக்கால் | 136 | 71.2 | 91 |
| கரூர் | 101.5 | 63.2 | 61 |
| கிருஷ்ணகிரி | 95.1 | 74 | 28 |
| மதுரை | 104.3 | 100.7 | 4 |
| மயிலாடுதுறை | 85.6 | 65.2 | 31 |
| நாகப்பட்டினம் | 72.9 | 75.1 | -3 |
| நாமக்கல் | 123.9 | 81.2 | 53 |
| நீலகிரி | 198 | 134.3 | 47 |
| பெரம்பலூர் | 45.1 | 45.9 | -2 |
| புதுச்சேரி | 40 | 66.6 | -40 |
| புதுக்கோட்டை | 60.1 | 56.7 | 6 |
| ராமநாதபுரம் | 83.6 | 90.3 | -7 |
| ராணிப்பேட்டை | 27 | 38.5 | -30 |
| சேலம் | 117.1 | 87.2 | 34 |
| சிவகங்கை | 104.2 | 83.5 | 25 |
| தென்காசி | 190.9 | 155 | 23 |
| தஞ்சாவூர் | 85 | 70.7 | 20 |
| தேனி | 172.7 | 129.1 | 34 |
| திருநெல்வேலி | 147.2 | 113.2 | 30 |
| திருப்பத்தூர் | 53.3 | 58.5 | -9 |
| திருப்பூர் | 137.1 | 77.2 | 78 |
| திருவள்ளூர் | 8.3 | 37.3 | -78 |
| திருவண்ணாமலை | 36.9 | 53.5 | -31 |
| திருவாரூர் | 121.4 | 69.4 | 75 |
| தூத்துக்குடி | 123.8 | 99.6 | 24 |
| திருச்சிராப்பள்ளி | 64 | 57.5 | 11 |
| வேலூர் | 36.8 | 50.8 | -28 |
| விழுப்புரம் | 27.9 | 33.2 | -16 |
| விருதுநகர் | 124.7 | 112.2 | 11 |
| **தமிழ்நாடு மற்றும் புதுவை** | **98.0** | **80.5** | **22** |

## ஏப்ரல் 2022 பெய்த மழை அளவு

| *மாவட்டம்* | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 49.1 | 19.7 | 149 |
| செங்கல்பட்டு | 1.3 | 12.3 | -90 |
| சென்னை | 0.1 | 12.1 | -99 |
| கோயம்புத்தூர் | 89.7 | 58.4 | 54 |
| கடலூர் | 49.8 | 15.9 | 213 |
| தர்மபுரி | 48 | 43.8 | 9 |
| திண்டுக்கல் | 94.4 | 60.9 | 55 |
| ஈரோடு | 74.9 | 44.9 | 67 |
| கள்ளக்குறிச்சி | 36.5 | 17 | 114 |
| காஞ்சிபுரம் | 6 | 19.4 | -69 |
| கன்னியாகுமரி | 195.6 | 103.6 | 89 |
| காரைக்கால் | 76.9 | 24.2 | 218 |
| கரூர் | 51.8 | 32.1 | 61 |
| கிருஷ்ணகிரி | 26.7 | 36.9 | -28 |
| மதுரை | 86.5 | 52.9 | 64 |
| மயிலாடுதுறை | 46.8 | 20.8 | 125 |
| நாகப்பட்டினம் | 49.5 | 28.6 | 73 |
| நாமக்கல் | 85.5 | 43.7 | 96 |
| நீலகிரி | 100.6 | 67.9 | 48 |
| பெரம்பலூர் | 10.6 | 21.1 | -50 |
| புதுச்சேரி | 8.5 | 16 | -47 |
| புதுக்கோட்டை | 39.8 | 28.9 | 38 |
| ராமநாதபுரம் | 82.5 | 46.9 | 76 |
| ராணிப்பேட்டை | 2 | 17.9 | -89 |
| சேலம் | 71.2 | 45.9 | 55 |
| சிவகங்கை | 86.3 | 42.3 | 104 |
| தென்காசி | 174.2 | 74.8 | 133 |
| தஞ்சாவூர் | 57.8 | 30.6 | 89 |
| தேனி | 151.7 | 68.8 | 121 |
| திருநெல்வேலி | 130.7 | 58.7 | 123 |
| திருப்பத்தூர் | 30.8 | 27 | 14 |
| திருப்பூர் | 86.9 | 42.2 | 106 |
| திருவள்ளூர் | 0.1 | 15.5 | -99 |
| திருவண்ணாமலை | 9.7 | 19.5 | -50 |
| திருவாரூர் | 92.4 | 32.7 | 183 |
| தூத்துக்குடி | 95.9 | 50.2 | 91 |
| திருச்சிராப்பள்ளி | 20.3 | 27.3 | -26 |
| வேலூர் | 11.4 | 23.5 | -51 |
| விழுப்புரம் | 14.5 | 10.6 | 36 |
| விருதுநகர் | 106.2 | 56 | 90 |
| **தமிழ்நாடு மற்றும் புதுவை** | 65.1 | 39.5 | 65 |



கோடைகால பருவமழை - 2022 தமிழ்நாடு மற்றும் புதுவை
01.03.2022 முதல் 09.05.2022 வரை பெய்த மழை அளவு
பதிவான மழை: 98.0 மி மீ) இயல்பு மழை : 80.5 (மி மீ) இயல்பிலிருந்து வேறுபாடு : (+) 22
மழை அளவு (மி.மீ)
12.0
11.0
10.0
9.0
8.0
7.0
6.0
5.0
4.0
3.0
2.0
1.0
0.0
மார்ச் 1
மார்ச் 5
மார்ச் 10
மார்ச் 15
மார்ச் 20
மார்ச் 25
மார்ச் 31
ஏப்ரல் 5
ஏப்ரல் 10
ஏப்ரல் 15
ஏப்ரல் 20
ஏப்ரல் 25
ஏப்ரல் 30
மே 5
மே 10
மே 15
மே 20
மே 25
மே 31
நாள்


09/05/2022 காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி
நேரத்தில் பதிவான மழையளவு [மி. மீ]
இந்திய வானிலைத் துறை
மண்டல வானிலை நிலையம், சென்னை
தேதி : 09/05/2022
வேலூர்
திண்டுக்கல்
திருப்பத்தூர்
திருவண்ணாமலை
கள்ளக்குறிச்சி
கடலூர்
அரியலூர்
காரைக்கால்
தூத்துக்குடி
நாகப்பட்டினம்
மதுரை
சிவகங்கை
விருதுநகர்
ராமநாதபுரம்
தென்காசி
மழையளவு [மி. மீ]
லேசான மழை (0.1 - 15.6)
மிதமான மழை (15.6 - 64.5)
கனமழை (64.5 - 115.6)
மிக கனமழை (115.6 - 204.5)
அதி கனமழை (>204.5)

## 09/05/2022 காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை ( °C) மற்றும் இயல்பிலிருந்து அதன் விலகல் (°C)

இந்திய வானிலைத் துறை
மண்டல வானிலை நிலையம், சென்னை

தேதி: 09/05/2022





அதிகபட்ச வெப்பநிலை = 40.5°C
இடம் : மதுரை(வி. நி)

குறிப்பு: இயல்பிலிருந்து அதிகபட்ச வெப்ப நிலையின் விலகல் அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளது
வி.நி : விமான நிலையம்

---

## 09/05/2022 காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை ( °C) மற்றும்

இந்திய வானிலைத் துறை
மண்டல வானிலை நிலையம், சென்னை
தேதி : 09/05/2022




குறைந்தபட்ச வெப்பநிலை (சமவெளி பகுதிகளில்) : 22° C
இடம் : கரூர் பரமத்தி
குறைந்தபட்ச வெப்பநிலை (மலை பகுதிகளில்) : 10.6° C
இடம் : ஊட்டி

குறிப்பு: இயல்பிலிருந்து குறைந்தபட்ச வெப்ப நிலையின் விலகல் அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளது
வி.நி : விமான நிலையம்

# வங்க கடலில் அசானி புயல் - மீனவர்களுக்கான எச்சரிக்கை


## இந்திய வானிலைத் துறை
### மண்டல வானிலை நிலையம்
### சென்னை

நாள்: 09/05/2022


மீனவர்களுக்கான எச்சரிக்கை - 09.05.2022





மீனவர்களுக்கான எச்சரிக்கை - 10.05.2022




மீனவர்களுக்கான எச்சரிக்கை - 11.05.2022




மீனவர்களுக்கான எச்சரிக்கை - 12.05.2022




**ஆழ்கடலிலுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்**

# வகைப்பாடு

| | |
|---|---|
| வட தமிழக மாவட்டங்கள் | சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி,<br>தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் |
| தென் தமிழக மாவட்டங்கள் | ராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், மதுரை |
| உள் தமிழக மாவட்டங்கள் | வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, கள்ளக்குறிச்சி |
| வடஉள் தமிழக மாவட்டங்கள் | வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர். |
| தென்உள் தமிழக மாவட்டங்கள் | சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி. |
| கடலோர தமிழக மாவட்டங்கள் | சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி. |
| வட கடலோர தமிழக மாவட்டங்கள் | சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை. |
| தென் கடலோர தமிழக மாவட்டங்கள் | ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| டெல்டா மாவட்டங்கள் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை |
| மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள் | நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர் |

**<u>மழைப்பொழிவின் பரவல்</u>**:

| (விழுக்காடு) மழை பதிவான இடங்கள் | வகைப்பாடு |
|---|---|
| **76-100** | பெரும்பாலான |
| **51-75** | அநேக |
| **26-50** | ஒருசில |
| **1-25** | ஓரிரு |
| மழையில்லை | வறண்ட |

**<u>மழைப்பொழிவின் தீவிரம்</u>**:

| | |
|---|---|
| **Light rain** | லேசான மழை |
| **Moderate rain** | மிதமான மழை |
| **Heavy rain** | கனமழை |
| **Very heavy rain** | மிக கனமழை |
| **Extremely heavy rain** | அதி கனமழை |